செந்திலன் வெளியீடாக

# ஸ்வாமிமலை நாதரின் தத்துவ பாடல்கள்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

MADRAS RECORD OFFICE
MADRAS

1/2.63.

ஆக்கியோன் :-

அருள்கவி,

கோவை :- சாமிகிரி

]    [ விலை 7 காசுகள்

ழ26:38.21 Sv
M63
177522

JT1522

# அவன் அருள்.

உணர்விழந்து அலைந்திருந்தேன், நொந்து
போன சிந்தையில்
கிணர் இடிந்த கீழதான கீரை விதை விழியுடன்.
புணர்வறியாப் பேதைபோலப், புரிந்திடாமல்
புலம்பினேன்.
அணல் சிவந்த அழகுடனே அவன்
அருளைக் கண்டனே.

*

விருப்பும் இல்லை, வெறுப்புமில்லை,
வேறெதுவும் இல்லையே.
நெருப்பதான நீண்டமூச்சு
நின்று நின்று வந்ததும்
குறு குறுத்த விழியிலே
கொப்பளித்து நீர்வர
உருகி நின்று உமையாகி
உமையாள்பாதம் கண்டேனே.

*

அருள்கவி,
கோவை :- சாமிகிரி.



உகார, அகார, மகாரமான.......
ஓங்காரரூப கணபதியே,.......
உடலாகிநின்ற, உணர்வாகிகண்ட,
இடர்போக்குகின்ற, அவர்துணையே. — உகா
ஓ...வென்று நீண்டு "ம்" என்று முடியும்
உலகாளும் காற்றும் மழையும்
ஓதாமல் உயிர்கள், உயிர்வாழ வில்லை - உன்
பாதாரவிந்தம் பகரும். — உகா
வேதாந்தமூலப் பொருளாகி வந்த
விதமானவனே நாயகனே.......
மதங்கொண்ட யானை முகத்தோனே - சாமி
மலையோனவனின் சகோதரனே. — உகா

## விதிப்பயனும்! மதித்தவனும்!!

விதித்தது எதற்கென சொன்னவனே - என்னுள்
உதித்தவன் மதித்தவன் ஷண்முகனே.......!— விதி
சாதித்தேன் சாமிமலை
சக்திவேல் தனிஞானம்......!

போதித்தான் அவன் அருள்!
பெயருள்ள அறுகோணம்.
ஆதி அனாதையான
அமைதியிலே மௌனம்,
ஜோதி சொரூபமாகி
சுகம் கண்டதே கவணம்......! — விதி

மண்பொருள் பெண்களினால்
மயக்கம் தந்தார்! அதில்
கண்ணெட்டாக் காரியத்தை......!
காட்டிவிட்டார்!
ஏன்மனம் கெட்டாயாடா?
என்று சிரித்துவிட்டார் - என்னை
இன்பதுன்பமற்றிருக்க சபித்துவிட்டார். — விதி

## ஆசையாலானயா? ஆறுமுகன்!

ஆசையால் ஆனவுடல் அழிந்தாலும், -- முருகா
ஆறுமுகா என்னை ஆட்கொள்வாயையா. — ஆசை

மனம், வாக்கு, காயமதில்
மறைந்திருப்பாய் — காம

மயக்கம் ஆங்காரமதை ... !
மதியாமலே இருப்பாய்
பாவவினை போக்க ...... !
பக்திதனை தருவாய்
பயங்கரனாய் மாறிப்
பாதகத்தை அழிப்பாய். — ஆசை

ஆவி, இருக்கும் வரை
அடியேனை மறவாதே
அதன் பிறகு பிரிந்து — எல்லோரும்
அழும்போது போகாதே
தொழுவதெல்லாம் வீணா?
துணையற்று விட்டிடாதே
தோணும் சாமிமலை
தெய்வமே கைவிடாதே. — ஆசை

## பகையான உடலாசை!

குமரவடிவேலவர் கொன்று விட்டார் — பயத்தை
[கொன்றுவிட்டார்
கோடான கோடி இன்பம் தந்துவிட்டார். — குமர

பேசவும்; பிழைக்கவும்;
பிழையென; நினைக்கவும்;
நடக்கவும்; நிற்கவும்;
நல்வார்த்தை சொல்லவும்;
வாங்கவும்; கொடுக்கவும்;
வருங்காலம் உணரவும் — இப்படி
வதைப்பட்டு வாழாமல்
அதைப்பற்றி எண்ணுமல் — குமர
குற்றமில்லாமலே கோபம் வராது
குகனின் அருளுக்கு நிகரானதேது!
பற்ருசை யற்றவர்க்கு பயம் கிடையாது
பகையான உடலாசை உளத்தில் இராது.-குமர

## கோபமும்; கொஞ்சலும்.

கொஞ்சி விளையாடும், குழந்தையா! – முருகையா ... !
கோபம் கொண்டால், உனக்கு நிகர்யாரையா? — கொஞ்
அறியாத சிறுவனின், சிரிப்பிருக்கும்! – முகத்தில்
அருளான தாண்டவம் நிறைந்திருக்கும்.
அசுரர்களை வெல்லும் வேலிருக்கும் – நெஞ்சில்
அனுதினம் துதிப்போர்க்கு அஞ்சாதருளிருக்கும்—கொஞ்

177522

சத்துரு சங்காரனே வேலவனே முருகா......!
சாமிகிரியில் நின்ற ஷண்முகனே — முருகா.......!!
எத்திசையும் போற்றும் இறைவனே முருகா!!! — என்றால்
என்றும் எனையாளும் கந்தனே முருகா முருகா! முருகா!!
— கொஞ்

## விந்தையான மதி

அழகென்ற பெயராகி முருகா வந்தாயா?
அருளான் அறிவாகி ஆதரிப்பாயா? — அழ

626:56:211CM N65

பாசபந்தமான ஆசை உணர்வற்று
பேசாமௌனியாய் வந்தாயா ? — இல்லை
நீசசெயல்களால் ரோசமனமற்று
மாசற்ற கொள்கையைத் தந்தாயா ?
மானிலம் உயிர்விற்கும் சந்தையா ? — பொருள்
போதையும் அங்குள்ளோர் யாரையா?
புரியாதையா ..........! தெரியாதையா! புகழ்
பேரின்ப நிலையான கந்தய்யா!
விந்தையானமதி, மந்தமாக — சுகம்
வந்துபோன, மாயமயக்கமா ?—இதை
சொந்தமற்ற உடல், அந்தரங்க உயிர்
கந்தனின் செவி கேட்குமா? உலகம் ஏற்குமா? — அழ

## உயிர்த்துணைவன்

கோயிலும் நிலைப்பதில்லை — அங்கே!
குடிகொண்டார் இருப்பதில்லை. — கோ

கட்டிவிடும் கோயில் அல்ல! – இடிந்தால் .......
கட்டிவிடும் கோயில் அல்ல ...... உடலை
சுட்டுவிடும் சுற்றத்தாரே!
விட்டாலும் உயிர்துணையாய்!
வேலவன் வருவாரே ... .... — கோ

எலும்பும், நரம்பும், தசையாலே,
எழுந்த கோயில்.
நாளுந் தோல் சுவற்றின்
நாற்றங் கழுவுங் கோயில்.
தொண்ணூற்றாறு தத்துவத்
தேவர்களான கோயில்.
கண்ணில் காணுமல் உடல்
மண்ணில் மறையும் கோயில். — கோ

## மனோதய தொல்லை!

தெரியுது போக வழியுமில்லை – அருள்
புரியுது மனமது தெளியவில்லை — தெரியுது

வருபவன் குருடன், வழியிலே கிணறு.
வரவர அறிவது கைவேலல்லவோ......!
அருளொடு சாமிநாத னருளாலே
அதிசய, அற்புத, ரகசியம், சொல்லவோ!
— தெரியுது

ஆபத்திலே அமைதி!
கோபத்திலே கெஞ்சலா......?
பாபத்திலே பரிவு......!
பண்பெலா உன் செயலா......?
தீபச்சுடர் உடலுள்
தெரிந்து கொள்வெனும் பொருளா......?
தேனூற்றில் அமுதூறும்
தென்பழனி வேலா. — தெரியுது

## காட்டில் எரிந்த நிலா!

ஊட்டிவிட்டால் உண்பேன் - முருகா
உறங்க வைத்தால் தூங்குவேன்
கூட்டி வைத்தால் சேர்வேன்
குமரா உன் செயல் என்பேன் — ஊட்டி
ஏட்டிலே பாட்டிலே
எழுத முடியுமோ! — உணர்வை

சென்னை-600 008

ஒட்டிய சுகமதை
காட்ட இயலுமோ!
போட்டியிட்டே கேட்டால்
புரியமுடியுமோ! — நின்னை
நாட்டிய வேலாலே
நமக்கு பயம் வருமோ! — ஊட்டி
காட்டில் நிலா எரிந்தால்
கருவிருள் படாராதா......?
கேட்டவர்க்கே தெரிந்தால்
கேவலமாகாதா......?
வாட்டங் கொள்ளும் மனதை
வதைத்திட முடியாதா......?
வடிவேல் சரவணனால்
வரும் தீமை போகாதா......? — ஊட்டி

## சிரித்தது, வெறுத்தது!

பூத்தது; காய்த்தது; கனியானது; — மனதைக்
காத்தது அருள் சக்தி வேலென்பது —பூத்தது
சேர்த்தது; பிரித்தது;
வார்த்தைகள் வருவது;

சிரித்தது, வெறுத்தது,
செந்திலன் செய்வது! — பூத்தது

சூத்திரக்கயிர் மூச்சை ஓட்டிது ...... !
சூரியன் மதியோடு தோன்றியது!
ஆத்திரம் அதிலே உண்டாக்கியது – அதை
அடக்கிய அன்பருள் பயிரானது. —பூத்தது

## பாராட்டால் ஏது பயன்!

ஈடேற்ற மனம் இல்லையா? – முருகா
இரக்கமாய் கேட்க்கில்லையா? — ஈடேற்ற
பாராட்டு பவராலே பயனில்லையா? - கண்
நீரோட்டம் கண்டாயே கதியில்லையா....?
போராடும் மனத்தை இன்னும் புரியவில்லையா?
போகா இடத்திலும் உன் அருளில்லையா ....?
— ஈடேற்ற

பழித்தே பகைத்தே பலரை ரசித்தேனு....?
பசித்தோர் முகம் பார்த்து புசித்தேனு....?
அழித்து பிறவா உடல் எடுத்தேனு? – பேர்
ஆனந்த பாட்டில் பிழை தொடுத்தேனு....?
— ஈடேற்ற

177522

# சுகமுண்டு

சொல்வதில் நினைப்பதில் சுகமுண்டு........ வெற்றி
வேல்முருகனின் பெயர் துதிப்பதுண்டு. — சொல்
கள்ளம் இல்லாத கருத்துண்டு - அதனால்
கருணை உருவான அழகுமுண்டு
தொல்லைகள் இல்லாமல் போவதுண்டு - எதற்கும்
துயரப்படாத மனத்துணிவுமுண்டு
பொல்லாங்கு அழிந்த ஆனந்தமுண்டு - ஏனோ
பொருந்தாமல் போனதிலும் சக்தியுண்டு
வள்ளலாய் தாராள வாழ்வுமுண்டு - நமக்கு
வையகம் உள்ளளவும் கீர்த்தியுண்டு. — சொல்

ஓங்கார ஒளியான, சாமிமலை நாதனை.
பாங்கான உணர்வலையாய், பறந்து திரிந்தவனை
நீங்காத நினைவான, சக்திவேல் ஷண்முகனை,
நிர்குணத்தில் எழுந்த சற்குரு சரவணனை. —சொல்

---

விபரங்களுக்கு :-

**ஏ. ஸ்வாமிநாதன்,**
திருமஞ்சன வீதி, : ஸ்வாமிமலை.

233 / 63 ஸ்ரீ ஜனார்தன பிரஸ் லிமிடெட், கும்பகோணம்.